வெளியீடு—4

ஸ்ரீ வீதராகாய நம:

# ஜைன தர்ம பால பாடம்

## முதல் பாடம்



பஸ்திமடம் மைசூர் ஸ்டேட்

ஸ்வஸ்தி ஸ்ரீலக்ஷிமிசேன பட்டாரக ஸ்வாமிகள்

மேற்பார்வை செய்து பதிப்பிக்கப்பட்டது.


வெளியிடுவோர்:

சித்தாந்த நூல் நிலையம்,

ய முதலி தெரு, சென்னை-1.

விலை 31 ந. பைசா

Q3
N
177365



## முன்னுரை

"**ஜைன தர்ம பால பாடம்**" முதல் பாகம் என்ற இந்த நூல், ஜைன தர்ம தத்துவங்களையறிய விரும்பும், ஜைனர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் மிக்க உபயோகமானது. ஜைன சமூகத்திலே பெரியோர்களும் ஜைனசமயத்தின் தத்துவக் கோட்பாடுகளை அறியாதவர்களா யிருக்கின்றனர். மாணவர்களும், ஆங்கிலம், தமிழ் மாத்திரம் கற்பிக்கும் ஹைஸ்கூல்களில் கல்வி பயில்வதனால், ஜைன சமயத்தின் அடிப்படையான தத்துவங்களை ஒரு சிறிதும் அறிய முடியாமலிருக்கின்றனர். இவர்களுடைய இந்தக் குறைகளை நிவர்த்திக்க கல்கத்தா நகரவாசி, ஸ்ரீமான் பைஜ்நாத் சராவகி என்ற திகம்பர ஜைனோத்தமர், அவரிடம் தெரிவித்தேன் அவர்கள் "**சிசுபோத ஜைன தர்மம்**" என்ற ஹிந்தி நூலைக் கொடுத்து இதை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும்படி தெரிவித்தார்கள்.

நான், அவருடைய அரிய ஆலோசனையின்படி, மேற்கண்ட "சிசுபோத ஜைன தர்மம்" என்ற ஹிந்தி நூலைத் தமிழில் மொழிபெயர்த்து "ஜைன தர்ம பால பாடம்" முதல் பாகம் என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றேன். இந்த முதல் பாகத்திலேயே விரிந்த ஜைனதர்மம் முழுவதும் அடங்கியிருக்கவில்லை.

இதைத் தொடர்ந்து ஜைன தத்துவங்கள் பாகம் பாகமாக வெளிவரும்.

ஜைன சித்தாந்த நூல் நிலயத்தில், புத்தகங்கள் வெளியிட நிரந்தர நிதியொன்றும் இல்லை. ஒவ்வொரு புத்தக வெளியீடும் பல ஜைன தர்மஸ்தர்களின் பொருளுதவியாலேயே வெளி வருகின்றன. ஒவ்வொரு நூலும் விற்று அதைக்கொண்டு மற்ற புத்தகங்களை வெளியிட வேண்டி இருக்கின்றது. ஆதலால், இந்த நூலை, ஒவ்வொரு ஜைனரும் வாங்கி ஆதரித்தால், மற்றப் பாகங்கள் தொடர்ந்து வெளிவருவதற்கு மிக்க அனுகூலமாயிருக்கும்.

இந்த நூல் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கவேண்டிய சிறந்த நூலாகும். ஜைன சமயத்தை நன்கறிய உதவக்கூடியது.

**BRAHMACHARI K. SURYAKOTI.**

---

**பிரார்த்தனை :**

ஆதியா யுலகியல்பை யளித்தாய் நீயே
அருந்தவனு யறம்பகர்ந்த அறிவ னீயே
காதியா யிருவினையைக் கடிந்தாய் நீயே
கணமீரா றடியேத்துங் கடவு ளீயே
போதியாய்ப் பொருளளவு மானாய் நீயே
பொறிவாயி லைந்தவித்த புனித னீயே
சேதியா நிலவுகுணச் செல்வ னீயே
ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே

கருவான சிறைகளைய வல்லாய் நீயே
கலியாண மைந்துடைய கடவு ளீயே
மருவான பூம்பிண்டி மன்ன னீயே
மறையொரு நான்குரைத்த திருவள்ள னீயே
பெருவான மினிதாளும் பெம்மா னீயே
பெண்ணுருவு மாணுருவு மாணய் னீயே
திருமாலு நானமுகனு மானாய் நீயே
ஸ்ரீவர்த்த மானனெனுந் தீர்த்த னீயே.

---

# ஸ்ரீ தரிஸன ஸ்துதி

1. தரிசனம் தேவதேவஸ்ய தரிஸனம் பாபநாஸனம்||
தரிஸனம் ஸ்வர்க்ஸோபானம் தரிஸனம் மோக்ஷஸாதனம்||

2. தரிஸனேன ஜிநேந்த்ராணும் ஸாதூனும் வந்தனேனச||
நசிரம் திஷ்டதேபாபம் சித்ரஹஸ்தே யதோதகம்||

3. வீதராக முகம்த்ருஷ்ட்வா பத்மராக ஸமப்ரபம்||
நைகஜன்ம க்ரதம்பாபம் தரிஸனேன வினஸ்யதி||

4. தரிஸனம் ஜினசூர்யஸ்ய ஸம்ஸார த்வாந்தநாஸனம்||
போதனம் சித்தபத்மஸ்ய ஸமஸ்தார்த ப்ரகாஸனம்||

5. தரிஸனம் ஜிநசந்த்ரஸ்ய ஸத்தர்மாம்ருத வர்ஷணம்||
ஜன்மதாக விநாஸாய வர்தனம் ஸுகவாரிதே||

6. ஜீவாதிதத்வ ப்ரதிதர்ஸகாய ஸம்யத்வ முக்யார்ஷ்ட குணஸ்ரயாய||
ப்ரஸாந்த ரூபாய திகம்பராய தேவாதி தேவாய நமோஜிநாய||

7. சிதா நந்தைக ரூபாய ஜிநாய பரமாத்மநே||
பரமாத்ம ப்ரகாஸாய நித்யம் ஸித்தாத்மனே நம: ||

8. அனந்தானந்த ஸம்ஸார ஸந்ததி சேதகாரணம்||
ஜினராஜ பதாம்போஜ ஸ்மரணம் ஸரணம் மம||

9. அன்யதா ஸரணம்நாஸ்தி த்வமேவ ஸரணம் மம||
தஸ்மாத் காருண்ய பாவேன ரக்ஷ ரக்ஷ ஜினேஸ்வர||

10. நஹித்ராதா நஹித்ராதா நஹித்ராதா ஜகத்ரயே||
வீதராகாத் பரோதேவோ நபூதோ நபவிஷ்யதி||

11. ஜிநேபக்திர் ஜிநேபக்திர் ஜிநேபக்திர் தினேதினே||
ஸதாமேஸ்து ஸதாமேஸ்து ஸதாமேஸ்து பவேபவே||

12. விக்நௌகாஹா ப்ரளயம் யாந்தி ஸாகினீ பூதபன்னகாஹா||
விஷம் நிர்விஷதாம் யாதி ஸ்தூயமாநே ஜினேஸ்வரே||

13. ஜன்மஜன்ம க்ருதம்பாபம் ஜன்மகோடி ஸமார்ஜிதம்
ஜன்மம்ருத்யு ஜராதங்கம் ஹன்யதே ஜினதரிஸனுத்.

ஸ்ரீஜிநாய நம:

# முதற் பாடம்


## பஞ்ச நமஸ்கார மந்திரம்.

1. ணமோ அரஹந்தாணம்,
ணமோ சித்தாணம்,
ணமோ ஆயிரியாணம்,
ணமோ உவஜ்ஜாயாணம்,
ணமோ லோயே சவ்வ
ஸாஹுணம்.



இதன் பொருள் :

அரஹந்தர்களுக்கு நமஸ்காரம்




சித்தர்களுக்கு நமஸ்காரம்



ஆசாரியர்களுக்கு நமஸ்காரம்



உபாத்தியாயர்களுக்கு
நமஸ்காரம்



சர்வ சாதுக்களுக்கும்
நமஸ்காரம்

என்பதாம்.

பஞ்ச நமஸ்கார மந்திரத்தைப் பிழையின்றி இதில் உள்ளபடியே உச்சரிக்க வேண்டும்.

இம்மந்திரம் ஐந்து வாக்கியமும், முப்பத்தைந்து எழுத்தும், ஐம்பத்தெட்டு மாத்திரையுங் கொண்டது. இதனை ணமோகார மந்திரம் என்றும், நமஸ்கார மந்திரம் என்றும் சொல்லுவார்கள்.

## பஞ்ச பரமேஷ்டிகள்

பஞ்ச நமஸ்கார மந்திரத்திரத்தில் கூறப்பட்ட ஐவரும் பஞ்சபரமேஷ்டிகள் எனப்படுவார்கள். ஆன்ம பதவியிலும், குணங்களிலும் மிகவும் உயர்ந்தோராய் இந்திரன் முதலியோரும் வணங்கத் தக்க நிலையில் உள்ளவர்கள் பரமேஷ்டிகள் ஆவார்கள்.

## நமஸ்கார மந்திரத்தின் சிறப்பு

ஏஸோபஞ்ச ணமோ யாரோ ஸ்வ்வ பாவப் பணாஸனோ,
மங்களாணஞ் ச ஸவ்வேஸிம் படமம் ஹோயி மங்களம்.

இந்த நமஸ்கார மந்திரம் எவ்வகைப் பாபங்களையும் போக்கக்கூடியது. மங்களப் பொருள்கள் அனைத்திலும் சிறந்தது. ஆகையால், சுபகாரியங்கள் செய்யுமுன் இதைக் கட்டாயமாகக் கூறுதல் வேண்டும். இதன் பெருமையை

'மந்திரங்க ளைந்து மனத்துவரச் சென்றார்கள்
இந்திரற்கும் இந்திரரே யெண்'

என்ற அருங்கலச் செப்புச் செய்யுளாலும் அறியலாம்.

## சத்தாரி மங்களம்

அரஹந்த மங்களம், ஸித்தமங்களம், ஸாஹூமங்களம், கேவலி பண்ணத்தோ தம்மோ மங்களம்.

## சத்தாரி லோகோத்தமா

அரஹந்த லோகோத்தமா, ஸித்த லோகோத்தமா, ஸாஹூ லோகோத்தமா, கேவலி பண்ணத்தோதம்மோ [லோகோத்தமா.

## சத்தாரி சரணம் பவஜ்ஜாமி

அரஹந்த சரணம் பவஜ்ஜாமி, ஸித்த சரணம் பவஜ்ஜாமி, ஸாஹூ சரணம் பவஜ்ஜாமி, கேவலி பண்ணத்தோ தம்மோ சரணம் பவஜ்ஜாமி.

கேள்விகள் :

1. பஞ்ச நமஸ்கார மந்திரத்தைப் பிழையின்றித் தெளிவாகக் கூறு.
2. அம்மந்திரத்தால் யார் யாருக்கு நமஸ்காரம் செய்யப்பட்டுள்ளது ?
3. பஞ்ச நமஸ்கார மந்திரத்தின் சிறப்புயாது? அதனை எப்பொழுது கூற வேண்டும் ?
4. நீ எந்தப் பரமேஷ்டியைச் சேர்ந்தவன் ?
5. பரமேஷ்டிகள் யார்? எத்தனை பேர்? அவர்கள் பெயர்கள் யாவை ?

# இரண்டாம் பாடம்

## தீர்த்தங்கரர்களின்
## பெயரும், நிறமும், லாஞ்சனையும்.


நன்மை தரக்கூடிய உண்மையான தருமத்தைப் போதித்த மகான்கள் தீர்த்தங்கரர் எனப்படுவார்கள். இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களின் பெயரும், நிறமும், லாஞ்சனையும் பின்வருமாறு :

1 ஸ்ரீவிருஷபநாதர்
பொன்னிறம்



எருது

2 ஸ்ரீ அஜிதநாதர்
பொன்னிறம்




யானை

3 ஸ்ரீசம்பவநாதர்
பொன்னிறம்



குதிரை

4 ஸ்ரீ அபிநந்தநநாதர்
பொன்னிறம்




குரங்கு

5 ஸ்ரீசுமதிநாதர்
பொன்னிறம்



சக்கரவாகம்


6 ஸ்ரீபத்மப்ரபர்
மாணிக்க நிறம்



தாமரை

7 ஸ்ரீசுபார்சுவநாதர் 8 ஸ்ரீசந்திரப்ரபர் 9 ஸ்ரீபுஷ்பதந்தர்

பச்சைநிறம் வெண்மை வெண்மை






ஸ்வஸ்திகம் சந்திரன் முதலை

10 ஸ்ரீசீதளநாதர் 11 ஸ்ரீசிரேயாம்சநாதர் 12 ஸ்ரீவாசுபூஜ்யர்

பொன்னிறம் பொன்னிறம் மாணிக்கநிறம்


கற்பகவிருட்சம் காண்டாமிருகம் எருமை

13 ஸ்ரீவிமலநாதர் 14 ஸ்ரீஅநந்தநாதர் 15 ஸ்ரீதர்மநாதர்

பொன்னிறம் பொன்னிறம் பொன்னிறம்







பன்றி முள்ளம்பன்றி வஜ்ராயுதம்

16 ஸ்ரீசாந்திநாதர் 17 ஸ்ரீகுந்துநாதர் 18 ஸ்ரீஅரநாதர்

பொன்னிறம் பொன்னிறம் பொன்னிறம்






மான் ஆடு மீன்

19 ஸ்ரீமல்லிநாதர் 20 ஸ்ரீமுனிசுவ்ருதர் 21 ஸ்ரீநமிநாதர்

பொன்னிறம் இந்திர நீலம் பொன்னிறம்







கலசம் ஆமை நீலத்தாமரை

22 ஸ்ரீநேமிநாதர் 23 ஸ்ரீபார்சுவநாதர் 24 ஸ்ரீமகாவீரர்

இந்திரநீலம் பச்சைநிறம் பொன்னிறம்

சங்கு பாம்பு சிம்மம்

## பலபெயர்களுள்ள தீர்த்தங்கரர்கள்

(1) ரிஷபநாதர்—ஆதிநாதர், விருஷபநாதர் என்றும்;
(2) புஷ்பதந்தர்—சுவிதிநாதர் என்றும்,
(3) வர்த்தமானர்—வீரர், அதிவீரர், சன்மதி, மகாவீரர் என்றும் வேறுபெயர்களும் பெறுவர்.

## லாஞ்சனைகள்

தீர்த்தங்கரர்கள் உலகில் அவதாரம் செய்யும் காலங்களில் இந்திரன் அவர்களைச் சுமேருமலைக்கு எடுத்துச்சென்று அபிஷேகம்செய்து பூசிக்க வரும் பொழுது அவர்களது வலதுகாற் பெருவிரலில் இருக்கும் சின்னங்களைப் பார்த்து இந்திரன் அவற்றை அவரவர்களுக்குரிய லாஞ்சனையாக நிச்சயிக்கின்றான்.

இந்த லாஞ்சனைகள் இல்லாவிடின் மூர்த்திகளுள் எதெது எந்தெந்த தீர்த்தங்கரர்களுடையது என்பதை அறிய முடியாது.

முனி, கேவலி, சாதுபரமேஷ்டி ஆகியோரின் பிம்பங்களில் லாஞ்சனை இருக்காது.


### கேள்விகள்

1. யாராகிலும் ஐந்து தீர்த்தங்கரர்களின் பெயர்களும், லாஞ்சனைகளும் கூறு.
2. நீ எந்தத் தீர்த்தங்கரரைச் சேர்ந்தவன்?
3. லாஞ்சனைகளை மாற்ற முடியுமா?
4. தாமரைச் சின்னம் யாருக்குரியது?
5. பலபெயர்களுடைய தீர்த்தங்கரர்கள் யார் யார்?
8. எல்லா மூர்த்திகளுக்கும் லாஞ்சனையுண்டா?
7. பொன்னிறமுடையோர் யார் யார்?
8. மாணிக்க நிறமு எத்தனை பேருக்குண்டு?

# மூன்றும் பாடம்


## ஜீவனும் அஜீவனும்.

**ஜீவன் :—** அறிவுடைய பொருள்கள் ஜீவன் எனப்படும். அறியவும் பார்க்கவும்கூடிய ஆற்றலுடையவைகளும், உண்ணல், உறங்கல் முதலிய தொழில் உடையவைகளும் ஜீவன்களாம்.



**மனிதன் பசு புரு தேவன் நரகன்**

**அஜீவன் :—** அறிவில்லாப் பொருள்கள் அஜீவன் எனப்படும். அறிதலும், பார்க்கும் ஆற்றலும், இன்பதுன்ப உணர்ச்சியும் இல்லாத பொருள்கள் அஜீவன்கள் ஆகும்.




**பக்கட் பெஞ்சு குடம் மேஜை நாற்காலி**

## ஜீவன் வகை

முக்த ஜீவன் என்றும் சம்சாரி ஜீவன் என்றும் ஜீவன் இருவகைப்படும்.


## முக்த ஜீவன்

எண்வகைக் கருமமுங் கெட்டு வீடு பெற்றவர்கள் முக்த ஜீவன் எனப்படுவார்கள். இவர்கள் இவ்வுலகப் பிறப்பு இறப்புக்களிலிருந்து நீங்கி உண்மையான இன்பத்தை அடைந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் முக்தர் என்றும் சித்தர் என்றும் அழைக்கப்படுவர்.



## சம்சாரி ஜீவன்

எண்வகைக் கருமமும் கெடாமல் அவற்றின் நிகழ்ச்சியால் இவ்வுலகில் பிறந்திறந்து துன்பம் அடைகின்றவை சம்சாரி ஜீவன் எனப்படும்.



மரம் மனிதன் குதிரை ஆடு பாம்பு கிளி

## சம்சாரி ஜீவன் வகை

த்ரஸ ஜீவன் என்றும் ஸ்தாவர ஜீவன் என்றும் சம்சாரி ஜீவன் இருவகைப்படும்.

## த்ரஸ ஜீவன் (1)


தமது விருப்பம்போல நடக்கவும், திரியவும், உண்ணவும், உறங்கவுங் கூடியவை த்ரஸ ஜீவன் எனப்படும். இது ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர் என நான்கு வகைப்படும்.



புழு
முட்டைப்பூச்சி
வண்டு
தேவர் பசு மனிதன் குரங்கு

## ஸ்தாவர ஜீவன் (2)

தோன்றி வளர்ந்து அழிவதும், இடம் விட்டுப் பெயராததும் ஆகியவை ஸ்தாவர ஜீவன் எனப்படும். இது ஓரறிவுயிராகும். இவை ஐந்து வகைப்படும்.



நிலம் நீர் தீ காற்று மரம்

கேள்விகள் :

1. ஜீவன் எத்தனை வகைப்படும் ?
2. ஜீவன் அஜீவன் இவைகளை விளங்கக் கூறு.
3. முக்த ஜீவன், சம்சாரி ஜீவன் ஆகியவற்றை உதாரணத்துடன் விளக்கு.
4. ஸ்தாவர ஜீவன் என்றால் என்ன ? எத்தனை ? எவை ?

# நான்காம் பாடம்

## இந்திரியங்கள்

சம்சாரி ஜீவன் உலகப் பொருள்களையும், அவற்றின் தன்மைகளையும் அறிவதற்குத் துணையாக உள்ள உறுப்புக்கள் இந்திரியம் எனப்படும். ஸ்பர்சன இந்திரியம், ரஸன இந்திரியம், க்ராண இந்திரியம், சட்சு இந்திரியம், சுரோத்ர இந்திரியம் என இந்திரியம் ஐந்தாம்.

## ஸ்பர்சன இந்திரியம்


ஸ்பர்சன இந்திரியம் என்பது தோலாகும். தோலின் மூலமாகப் பொருள்களின் கனம், வன்மை, மென்மை, வெப்பம், தண்மை ஆகியவை அறியப் படுகின்றன.



தோலின்மூலம் நெருப்பு பனிக்கட்டி கல் பஞ்சு ஆகியவற்றின் தன்மைகளை அறிகின்றோம்.

## ரஸன இந்திரியம்

ரஸன இந்திரியம் என்பது நாக்காகும். நாவின் மூலம் சுவை அறியப் படுகின்றது. உண்ணும்போது.



நாவினுல் புளி கரும்பு மிளகாய் நெல்லி பாகல் ஆகியவற்றின் சுவையை அறிகின்ருேம்.

## கிராண இந்திரியம்

கிராண இந்திரியம் என்பது மூக்காகும். மூக்கால் மணம் அறியப் படுகின்றது.



மூக்கினுல் மலரின் நறுமணமும் அழுகிய பொருள் களின் தீ மணமும் ஆகியவற்றை அறிகின்ருேம்.

## சட்சு இந்திரியம்

சட்சு இந்திரியம் என்பது கண்ணுகும். கண்ணுல் பொருள்களின் நிறம், வடிவம் ஆகியவை அறியப் படுகின்றன.



கண்ணுல் பழங்கள் தங்கம் பறவை

ஆகியவற்றின் நிறத்தையும் வடிவத்தையும் அறிகின்ருேம்:

## ஸ்ரோத்ர இந்திரியம்

ஸ்ரோத்ர இந்திரியம் என்பது காதாகும். காதால் பலவகையான ஒலிகளும் உணரப்படுகின்றன.



காதால் மனிதனும் பாம்பும் ஒலிகளை அறிகின்றனர்.

கேள்விகள் :

1. இந்திரியம் என்ருல் என்ன? அது எத்தனை? எவை?
2. ஸ்பர்சன இந்திரிய முதலிய ஐந்தையும் தனித்தனியாக உதாரணத்துடன் கூறுக.

# ஐந்தாம் பாடம்

## சம்சாரி ஜீவன் வகை

ஓர் இந்திரிய ஜீவன், இரண்டு இந்திரிய ஜீவன், மூன்று இந்திரிய ஜீவன், நான்கு இந்திரிய ஜீவன், ஐந்து இந்திரிய ஜீவன் என்று சம்சாரி ஜீவன் ஐந்தாம். இவைகளுள் ஓர் இந்திரிய ஜீவன் ஸ்தாவரம் ஜீவன் என்றும் மற்ற நான்கும் த்ரஸ ஜீவன் என்றும் பெயர் பெறும்.

## ஓர் இந்திரிய ஜீவன் 1.


நிலம், நீர், நெருப்பு, காற்று, தாவரம் ஆகிய ஐந்தும் ஓர் இந்திரிய ஜீவன் எனப்படும். ஸ்பர்சன் இந்திரியம் (தோல்) ஒன்றே உடையவை. இவற்றுள் நிலம் பிருத்வீ காயிக ஜீவன் என்றும், நீர் ஜலகாயிக ஜீவன் என்றும், நெருப்பு அக்நிகாயிக ஜீவன் என்றும், காற்று வாயுகாயிக ஜீவன் என்றும், மரம் முதலிய தாவரம் வனஸ்பதிகாயிக ஜீவன் என்றும் கூறப்படும்.



இதன் கருத்து:—ஜீவனானது, நிலம், நீர், நெருப்பு, காற்று, தாவரம் ஆகியவைகளை உடலாகக் கொண்டு வாழுங் காலத்தில் ஸ்பர்சனம் (தோல்) ஆகிய ஒன்றினால் மட்டும் உணரும் என்பதாம்.


## இரண்டு இந்திரிய ஜீவன் (2)

ஸ்பர்சனம், ரஸனம், ஆகிய இரண்டு இந்திரியங்கள் மட்டும் உள்ளவை இரண்டு இந்திரிய ஜீவன் எனப்படும். இவை தோலால் வெப்பம் முதலியவற்றையும், நாவால் சுவையையும் உணரத் தக்க புழு, நத்தை போன்றவைகள் ஆகும். இவை காது, கண், மூக்கு ஆகியவை இல்லாதவைகளாம்.



## மூன்று இந்திரிய ஜீவன் (3)

ஸ்பர்சனம் (தோல்) ரஸனம் (நாக்கு) க்ராணம் (மூக்கு) ஆகிய மூன்று இந்திரியங்கள் மட்டும் உள்ளவை மூன்று இந்திரிய ஜீவன் எனப்படும். எறும்பு, மூட்டைப்பூச்சி போன்றவை தோலால் வெப்பம் முதலியவற்றையும், நாவால் இனிப்பு முதலிய சுவையையும், மூக்கால் மணத்தையும் உணரக் கூடியவை. இவைகளுக்குக் கண்ணும், காதும் இல்லை. இதனை



"மெய்வாய்மூக் கென்றுவற்றின் மேய வறிவெறும்பு
செய்ய முகடு சிதலாதி—வையமெலாம்
வந்தனைசெய் தேத்தவரும் வாம னருளினால்
இந்தியமூன் றுமுயிரா மென்று" —ஜீவசம்போதனை


என்ற செய்யுளால் அறியலாம்.

## நான்கு இந்திரிய ஜீவன் (4)



ஸ்பர்சனம் (தோல்) ரஸனம் (நாக்கு) க்ராணம் (மூக்கு) என்ற இந்திரியங்களுடன் சட்சு (கண்) இந்திரியமும் உள்ளவை நான்கு இந்திரிய ஜீவன் எனப்படும். தும்பி, வண்டு முதலியவைகளாம். இவைகளுக்குக் காது இல்லை.

## ஐந்து இந்திரிய ஜீவன் (5)



ஸ்பர்சனம் (தோல்) ரஸனம் (நாக்கு) க்ராணம் (மூக்கு) சட்சு (கண்) ஆகிய நான்குடன் ஸ்ரோத்ரம் (காது) ஆகிய ஒன்றும் பெற்று இந்திரியங்கள் யாவும் பொருந்திய ஜீவன் ஐந்து இந்திரிய ஜீவன் எனப்படும். மனிதனும், விளங்கும், பறவையும் போல முதுகு எலும்புடைய ஜீவன்களாம்.

### கேள்விகள்

1. சம்சார ஜீவன் எத்தனை? எவை?
2. ஸ்பர்சன இந்திரிய முதலியவை எவற்றை உணர்த்தும்?
3. ஓர் இந்திரிய ஜீவனுக்குரிய வேறு பெயர் யாது?
4. அக்னிகாயிகம், ஜலகாயிகம் என்பவை யாவை?
5. ஸ்தாவர ஜீவன் எத்தனை வகைப்படும்?
6. த்ரஸ ஜீவன் எத்தனை வகைப்படும்? எவை?